2003 மார்ச் 25]

முற்பகல் 10-25

65—

நீதிமன்றக் கட்டடம்

***11754—டாக்டர் க. பொன்முடி:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் விரைவாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசால் ரூ.961.92 இலட்சங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்ற நீதிமன்றக் கட்டடம் அங்கேயிருக்கின்ற அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அருகிலே இருக்கின்றது. அங்கேயிருக்கின்ற ஒரு நீண்ட நாள் கோரிக்கை—அந்த நீதிமன்றம் புதிய கட்டடத்திற்கு மாற்றப்படுகிறபோது, அந்தப் பழைய கட்டடத்தை அந்த அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கொடுக்க வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கல்வித் துறையோடு கலந்து பேசி அதற்குரிய ஏற்பாடுகளை விரைவிலே செய்ய முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலம் மற்றும் கட்டடம் எந்தத் துறைக்குச் சொந்தமானது என்ற தகவல் இப்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துரு கொடுக்கிறபட்சத்தில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 66, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

66—

தங்கும் விடுதி

***344—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அதிகமாக வரும் பயணிகள் மற்றும் பக்தர்கள் தங்க போதுமான இட வசதிக்காகக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) கோயில் பகுதியில் பயணிகளைக் கவரும் விதத்தில் கட்டடம் கட்டும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு அதிகமாக வரும் பயணிகள் மற்றும் பக்தர்கள் தங்க திருக்கோயிலுக்குச் சொந்தமான 110 குடியிருப்புகள் ஏற்கெனவே உள்ளன. இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு மிக அருகில் அம்மன் சன்னதி முன்புறம் பழைய சேது இல்லம் தங்கும் விடுதிக் கட்டடம் இடித்து அப்புறப்படுத்தப்பட்ட இடத்தில், தோராயமாக, ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் உபரி நிதியிலிருந்து பயணிகளைக் கவரும் விதத்தில் வணிக வளாகத்துடன்கூடிய தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் ஏன் கட்டடக் கலையையும் உலகத்திற்கே பறைசாற்றக்கூடிய வகையிலே, மிகப் பிரம்மாண்டமான முறையிலே அமைந்துள்ள இந்த இராமேஸ்வரம் திருக்கோயிலுக்கு போதுமான வசதி, தங்கும் விடுதிகள் இல்லாமல், பல்வேறு சந்தர்ப்பங்களிலே வெளிநாட்டுப் பயணிகளும், உள்நாட்டுப் பயணிகளும் அவதியுறுகிறார்கள். குறிப்பாக, சென்ற முறை நானே,